DINA MALAR

27 MAR 2023

PAGE 3



புதுச்சேரி பல்கலைக் கழக சமுதாய கல்லூரியில் மாணவர்களுக்கான 'சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை' தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

# கல்லூரி மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

**புதுச்சேரி, மார்ச் 27–**

புதுச்சேரியில் கல்லூரி மாணவர்களுக்கு 'சுற்றுச் சூழலுக்கான வாழ்க்கை முறை' தலைப்பில் விழிப் புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

புதுச்சேரி மாசு கட்டுப் பாட்டு குழுமத்தின் சுற் றுச்சூழல் தகவல், விழிப் புணர்வு, திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதார திட்டம், மதுரை தியாக ராஜர் தொழில்நுட்ப கல் லூரி மற்றும் புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரி ஆகியன சார் பில், 'சுற்றுச்சூழலுக் கான வாழ்க்கை முறை' தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

லாஸ்பேட்டை, புதுச் சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில் நடந்த நிகழ்ச்சிக்கு, உதவி பேராசிரியர் சுரேஷ்குமார் தலைமை தாங்கினார். உதவி பேராசிரியர் சந்திர சேகர் ராமலிங்கம், சுற்றுச் சூழலுக்கான வாழ்க்கை முறை பற்றி சிறப்புரை யாற்றினார். திட்ட அலுவ லர் நித்தியா தலைமையி லான குழுவினர் வினாடி – வினா நிகழ்ச்சியை நடத்தினர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில், கல் லூரி மாணவர்கள் மற் றும் மதுரை, தியாகராஜர் தொழில்நுட்ப கல்லூரி, புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரி பேரா சிரியர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

DINAMALAR

27 MAR 2023

PAGE 1

# பல்கலை., நிகழ்கலை பள்ளி இயல், இசை, நாடக விழா

**புதுச்சேரி, மார்ச் 27–**

உலக நாடக தினத்தை யொட்டி, புதுச்சேரி பல்கலை., நிகழ்கலை பள்ளி சார்பில், இயல், இசை, நாடக விழா நடைபெற்றது.

நேற்று முன்தினம் முதல் வரும் 28 ம்தேதி வரை இந்த நாடக விழா நடக்கிறது. நேற்று முன்தினம் காத்தவராயன் கதையான 'கழுமரத்தில் காத்தன்' தலைப்பில் நாடக அரங்கேற்றம் நடந்தது.

தொடர்ந்து, தமிழ், ஆங்கிலம், இந்தி, ஒடியா என 8 நாடகங்கள் இடம்பெற்றது. நாடக துறை மாணவர்கள் நடிக்கும் இந்த நாடகங்களை, செல்வ ராசா ராகவேந்தன், கதீஸ்வரன், யஸ்வந்த், பஹீம் முகமது, நித்யானந்த ரவுத், ரோகித்குமார், பார்வதி, ராஜா, கவாஸ்கர் ஆகிய மாணவர்கள் இயக்கினர்.

தொடர்ந்து இன்று ஷேக்ஸ்பியர் மூலம் எழுதப்பட்ட கிங்லியர் 'இறுதியாட்டம்' தலைப்பில் இந்திரா பார்த்தசாரதி மூலம் தமிழாக்கம் செய்த நாடகம் நடக்கவுள்ளது. இந்த நாடகத்தை பேராசிரியர் ராசு இயக்கியுள்ளார். ஏற்பாடுகளை புல முதன்மையர் ஸ்ரீதரன், துறை தலைவர் வேலுசரவணன், பேராசிரியர்கள் ராஜாரவி வர்மா, முருகவேல் மற்றும் அலுவலர்கள் செய்திருந்தனர்.

DINATHANTHI

27 MAR 2023

PAGE 11



### பல்கலைக்கழகத்தில்

# உலக நாடக தின விழா

புதுச்சேரி, மார்ச்.27-

புதுவை பல்கலைக்கழகத்தின் நிகழ்கலைப்பள்ளி சார்பாக உலக நாடக தின விழா நேற்று முன்தினம் தொடங்கியது. அன்றைய தினம் புகழ்பெற்ற காத்தவராயன் கதை 'கழுமரத்தில் காத்தன்' என்னும் தலைப்பில் நாடகம் அரங்கேற்றம் செய்யப்பட்டது. தொடர்ந்து தமிழ், ஆங்கிலம், இந்தி, ஒடியா என 8 மொழிகளில் நாடகங்கள் நடந்தது. இந்த நாடகங்களை மாணவர்கள் செல்வராசா, ராகவேந்தன், கதீஸ்வரன், யஸ்வந்த், பஹீம் முகமது, நித்யானந்த ரவுத், ரோஹித்குமார், பார்வதி, ராஜா, கவாஸ்கர் ஆகியோர் இயக்கினர்.

(இன்று திங்கட்கிழமை) ஷேக்ஸ்பியர் எழுதிய 'கிங் லியர் இறுதியாட்டம்' என்னும் தலைப்பில் இந்திரா பார்த்தசாரதியால் தமிழாக்கம் செய்யப்பட்ட நாடகம் அரங்கேற்றம் நடைபெற உள்ளது. அந்த நாடகத்தை பேரா.ராசு இயக்க உள்ளார். இந்த நாடக தின விழா நாளை (செவ்வாய்க்கிழமை) வரை நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகளை புலமுதன்மையர் ஸ்ரீதரன், துறைத்தலைவர் வேலுசரவணன், பேராசிரியர்கள் ராஜா ரவிவர்மா, முருகவேல், மாணவர்கள் மற்றும் அலுவலர்கள் செய்து வருகின்றனர்.

MAALAI MALAR

27 MAR 2023

PAGE 2

# பல்கலைக்கழகத்தில் இயல், இசை, நாடக விழா

புதுச்சேரி, மார்ச்.27—

புதுவை பல்கலைக் கழகத்தில் நிகழ்கலை பள்ளி சார்பில் இயல், இசை, நாடக விழா நடந்து வருகிறது.

காத்தவராயன் கதையான கழுமரத்தில் காத்தன் என்ற தலைப்பில் நாடக அரங்கேற்றம் நடந்தது. தொடர்ந்து தமிழ், ஆங்கிலம், இந்தி, ஒடியா என 8 நாடகங்க்ள்இடம்பெற்றது. நாடக துறை மாணவர்களின் நாடகங்களை செல்வராசா ராகவேந்தன், கதீஸ்வரன், யஸ்வந்த், பஹீம்முகமது, நித்யானந்த ரவுத், ரோகித்குமார், பார்வதி, ராஜா, கவாஸ்கர் ஆகிய மாணவர்கள் இயக்கினர்.

இன்று ஷேக்ஸ்பியர் மூலம் எழுதப்பட்டகிங்லியர் இறுதியாட்டம் தலைப்பில் இந்திரா பார்த்தசாரதி மூலம் தமிழாக்கம் செய்த நாடகம் நடக்கிறது. நாடகத்தை பேராசிரியர் ராசு இயக்கியுள்ளார். ஏற்பாடுகளை புல முதன்மையர் ஸ்ரீதரன், துறை தலைவர் வேலு சரவணன், பேராசிரியர்கள் ராஜாரவிவர்மா, முருகவேல், அலுவலர்கள் செய்துள்ளனர்.

ந ா ை ள (செவ்வாய்க்கிழமை) வரை இந்த நாடக விழா நடக்கிறது.